PRIMARY SCHOOL


SEMESTRAL ASSESSMENT 2

TAMIL LANGUAGE PRIMARY 5 - 2013

<u>வினா 2</u>

PAPER 1 – COMPOSITION

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு **<u>100 சொற்களுக்குக் குறையாமல்</u>** ஒரு கட்டுரை/கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை/கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.




பேருந்து

கூட்டமாக

கைக்குழந்தையுடன்

உட்கார இடமில்லாமல்

தடுமாறிக் கொண்டு

தன்னிடத்தை அளித்து

இறங்கிச் சென்றார்

கம்பை ஊன்றி

PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2 - 2013

TAMIL LANGUAGE

PAPER 2

PRIMARY 5

**Name:** ______________________ **Class:** ______

**Date :** _____________ **Tamil Language** **Duration: 1hr30mins**

**Your Score**

______________

Parent"s Signature : ______________________

Date : ________________________

**P5 SA2**
**TESTPAPER 1**

## A1 வேற்றுமை

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான **வேற்றுமை உருபு** ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

மாதவி மிகவும் பொறுப்புள்ள மாணவி. அவள் தினமும் ___(1)___ வீடு திரும்பியதும் முதலில் தன் வீட்டுப் பாடங்களைத்தான் செய்வாள். அதன் பின் இளைப்பாறுவாள். ஆனால், அவள் தம்பி அப்படியல்ல. அவன் ___(2)___ வந்ததும் என்ன விளையாடலாம் என யோசிப்பான். வீடு திரும்பியதும் அம்மா சமைத்த சுவையான ___(3)___ குறை கண்டுபிடிப்பான். பின் தன் பள்ளியில் ___(4)___ இரவல் பெற்ற கணினி விளையாட்டுகளை விளையாடத் தொடங்குவான். அவ்வப்போது அழுது ஆர்ப்பாட்டம் செய்து தன் ___(5)___ கடைக்குச் சென்று விடுவான். தினமும் அவனைப் படிக்கத் தூண்டுவது ___(6)___ முடியாத ஒரு செயலாக இருந்து வருகிறது.

(Q1)________

(Q2) ________

(Q3)________

(Q4)________

(Q5) ________

(Q6)________

| | | |
|---|---|---|
| Q 1 | (1) | பள்ளியை |
| | (2) | பள்ளியிலிருந்து |
| | (3) | பள்ளிக்கு |
| | (4) | பள்ளியோடு |

| | | |
|---|---|---|
| Q 2 | (1) | வீட்டோடு |
| | (2) | வீட்டிலிருந்து |
| | (3) | வீட்டை |
| | (4) | வீட்டுக்கு |

| | | |
|---|---|---|
| Q 3 | (1) | உணவால் |
| | (2) | உணவில் |
| | (3) | உணவை |
| | (4) | உணவுக்கு |

| | | |
|---|---|---|
| Q 4 | (1) | நண்பர்களுக்கு |
| | (2) | நண்பர்களால் |
| | (3) | நண்பர்களை |
| | (4) | நண்பர்களிடமிருந்து |

| | | |
|---|---|---|
| Q 5 | (1) | அப்பாவால் |
| | (2) | அப்பாவுக்கு |
| | (3) | அப்பாவை |
| | (4) | அப்பாவுடன் |

| | | |
|---|---|---|
| Q 6 | (1) | அம்மாவோடு |
| | (2) | அம்மாவால் |
| | (3) | அம்மாவுடைய |
| | (4) | அம்மாவை |

## A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

| Q 7 | நல்லவன் என்று பெயர் எடுக்க ______________ செல்லும். | |
|---|---|---|
| | (1) | மாதம் |
| | (2) | வாரம் |
| | (3) | ஆண்டு |
| | (4) | நாள் |

| Q 8 | காற்றுள்ளபோதே ______________________. | |
|---|---|---|
| | (1) | பார்த்துக்கொள் |
| | (2) | வைத்துக்கொள் |
| | (3) | போற்றிக்கொள் |
| | (4) | தூற்றிக்கொள் |

| Q 9 | மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து<br>நோக்கக் குழையும் ______________________ . | |
|---|---|---|
| | (1) | இருந்து |
| | (2) | பருந்து |
| | (3) | விருந்து |
| | (4) | மருந்து |

| Q10 | அன்பிலார் ______________________ தமக்குரியர்<br>அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு. | |
|---|---|---|
| | (1) | அனைத்தும் |
| | (2) | எல்லோரும் |
| | (3) | அனைவரும் |
| | (4) | எல்லாம் |

| | | |
|---|---|---|
| Q11 | காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்<br>________________ மாணப் பெரிது. | |
| | (1) | ஞாலத்தின் |
| | (2) | உலகத்தின் |
| | (3) | நிலத்தின் |
| | (4) | இடத்தின் |

| | | |
|---|---|---|
| Q12 | நிழலின் அருமை வெயிலில் ________________. | |
| | (1) | தெரியும் |
| | (2) | முடியும் |
| | (3) | புரியும் |
| | (4) | செய்யும் |

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் இசையில் வல்லுநராக விளங்கினான். தன் நாட்டிற்கு வரும் இசைக் கலைஞர்களைப் பாட வைத்து பரிசுகள் வழங்குவான்.

இசைக்கலைஞர்கள் அரசவையில் பாடும்போது அவையிலுள்ளோர் பாராட்டிக் கைத்தட்டுவர். அவர்களும் தன்னைப்போல் இசை நுணுக்கம் அறிந்தவர்கள் என்று எண்ணி அரசன் பெருமைப்பட்டான். ஒரு முறை புகழ்பெற்ற இசைக்கலைஞர் ஒருவர் அந்நாட்டிற்கு வந்தார். அரசன் அவையில் உள்ளோரை அறிமுகப்படுத்தி அவர்கள் இசையின் பெருமைகளை **உணர்ந்தவர்கள்** என்று கூறினான்.

பின் இசைக்கலைஞர், "அரசே ! நான் தங்களிடம் பாடிப் பரிசு பெற வரவில்லை. இந்த அவையில் இசையின் பெருமையை உணர்ந்தவர்கள் இல்லை ; அறியாமையினால் தான் கைத்தட்டுகிறார்கள் ," என்றார். அரசனால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இசைக்கலைஞர் கூறுவது தவறு என்று நிரூபிக்க அரசன் விரும்பினான். அவன் உள்ளத்தில் ஒரு சூழ்ச்சி உண்டாயிற்று. இசைக்கலைஞரை மறுநாள் அவையில் பாடுமாறு அரசன் கூறினான்.

மறுநாள் அரசவை கூடிற்று. இசைக்கலைஞர் பாடுவதற்கு அமர்ந்தார். அவையோரைப் பார்த்து அரசன், "இந்த இசைக்கலைஞர் ஆணவம் உடையவன். இசை அருமை தெரிந்தவர்கள் இங்கு இல்லையாம். இவர் பாடும் போது யாராவது பாராட்டினால் தலை **துண்டிக்கப்படும்**," என்று கோபத்துடன் கூறினான்.

இசைக் கலைஞரின் இனிய குரலும் ராகம் தவறாமல் பாடிய பாடலும் அந்த அரங்கத்தையே பிரமிக்க வைத்தது. ஆனால், அரசனின் ஆணைக்குப் பயந்து அனைவரும் மௌனமாக இருந்தனர். ஒருவர் மட்டும் தன்னை அறியாமல் ஒரு கட்டத்தில் கைத்தட்டிக் கலைஞரைப் பாராட்டினார். அவையில் உள்ளோர் அவனைப் பரிதாபமாகப் பார்த்தனர். அரசன் இசைக்கலைஞரிடம் தன் நாட்டிலும் இசை அருமை அறிந்தவர் உள்ளார்

என்று கர்வத்தோடு கூறினார். அதற்குக் கலைஞர், ''அரசே! தன் உயிரை விட இசையை விரும்பும் ஒருவர் இங்குள்ளார் என நான் **ஒப்புக்கொள்கிறேன்.** அரசன் இசைக்கலைஞரைப் பாராட்டிப் பரிசுகள் அளித்தான்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

| Q13 | அரசன் தன் நாட்டிற்கு வரும் இசைக்கலைஞர்களை எவ்வாறு உபசரிப்பான்? | |
|---|---|---|
| | (1) | அவர்களைப் பாட வைப்பான் |
| | (2) | அவர்களைப் பாராட்டிக் கைத் தட்டுவான் |
| | (3) | அவர்களைப் பாட வைத்துப் பரிசுகள் அளிப்பான் |
| | (4) | அவர்களைப் பாராட்டிப் பரிசுகள் வழங்குவான் |

| Q14 | அவையில் உள்ளவர்களைப் பற்றி அரசன் இசைக் கலைஞரிடம் என்ன கூறினான்? | |
|---|---|---|
| | (1) | அவர்கள் இசையின் பெருமைகளை அறிந்தவர்கள் என்று |
| | (2) | அவர்கள் தன்னைவிட இசையில் வல்லுநர்கள் என்று |
| | (3) | அவர்கள் இசைக் கலைஞர்களுக்குப் பரிசு வழங்குவார்கள் என்று |
| | (4) | அவர்கள் இசைக் கலைஞர்களிடம் பாடிக் காட்டுவார்கள் என்று |

| Q15: | இசைக் கலைஞர் எதற்காக அந்நாட்டிற்கு வந்ததாகக் கூறினான்? | |
|---|---|---|
| | (1) | இசையில் உண்மையான ஆர்வம் உள்ளவர்கள் இல்லை என்பதை நிரூபிக்க |
| | (2) | பாடிப் பரிசுகள் பெற |
| | (3) | தன் திறமையைக் காட்ட |
| | (4) | இசையின் நுணுக்கங்களை அறிய |

| Q16 | அவையோர் இசைக் கலைஞரைப் பாராட்டியவனைக் கண்டு ஏன் பரிதாபப்பட்டனர்? | |
|---|---|---|
| | (1) | அவன் தவறான ராகத்தைக் கேட்டுப் பாராட்டினான் என்பதால் |
| | (2) | அவன் பரிசுகள் பெறவில்லை என்பதால் |

| | | |
|---|---|---|
| | (3) | அவன் தண்டனைக்கு ஆளாவான் என்பதால் |
| | (4) | அவன் இசை அருமையை உணராதவன் என்பதால் |

| | | |
|---|---|---|
| Q17 | | அரசன் ஏன் இசைக்கலைஞரின் இசையைப் புகழக் கூடாது என்று கூறினான் ? |
| | (1) | இசைக் கலைஞர் பாட இயலாதவன் என்று நிரூபிக்க |
| | (2) | அவையோர் இசை உணர்வு இல்லாதவர்கள் என்று நிரூபிக்க |
| | (3) | அவையோர் இசையின் பெருமையை உணர்ந்தவர்கள் என்று நிரூபிக்க |
| | (4) | அவையோர் ஆணவம் இல்லாதவர்கள் என்று நிரூபிக்க |

## B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(6 மதிப்பெண்கள்)

| | | | |
|---|---|---|---|
| Q18 | உணர்ந்தவர்கள் | (1) | படித்தவர்கள் |
| | | (2) | பார்த்தவர்கள் |
| | | (3) | அறிந்தவர்கள் |
| | | (4) | செய்தவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| Q19 | துண்டிக்கப்படும் | (1) | அகற்றப்படும் |
| | | (2) | வெட்டப்படும் |
| | | (3) | சாய்க்கப்படும் |
| | | (4) | பிரிக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| Q20 | ஒப்புக்கொள்கிறேன் | (1) | உறுதிக்கொள்கிறேன் |
| | | (2) | கவனித்துக்கொள்கிறேன் |
| | | (3) | எண்ணிக்கொள்கிறேன் |
| | | (4) | ஏற்றுக்கொள்கிறேன் |

**<u>B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்</u>**

*பின் வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:*

*Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன.*
*ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)*

# தேர்வும் விளையாட்டாகலாம்!

## தொடக்கநிலை 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பட்டறை





### *பட்டறை விவரங்கள்*

மே 3-ஆம் தேதி முதல் ஜூன் மாத இறுதி வரை
ஜூலை 10-ஆம் தேதி சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி

கட்டணம் - $150 வெள்ளி
(மதிய உணவு மற்றும் இடைவேளை சிற்றுண்டிகள் இதில் அடங்கும்)



*பட்டறையில்:-*

- கேள்விகளை அணுகும் முறை
- தேர்வுக்கான முக்கிய உத்திகள்
- வாழ்க்கைத் திறன்கள்
- படித்ததை நினைவில் நிறுத்தும் திறன்

ஆகியவை கற்பிக்கப்படும்.

ஏப்ரல் 30 - ஆம் தேதிக்குள் பதிவு செய்பவர்களுக்கு 10% கழிவு



| Q21 | எந்த மாதத்தில் பட்டறைக்கான கட்டணத்தில் கழிவு அளிக்கப்படும்? |
|---|---|
| (1) | ஜூன் மாதத்தில் |
| (2) | மே மாதத்தில் |
| (3) | ஏப்ரல் மாதத்தில் |
| (4) | ஜூலை மாதத்தில் |

| Q22 | பட்டறை யாருக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது? |
|---|---|
| (1) | கட்டணத்தில் கழிவு பெற்ற மாணவர்களுக்காக |
| (2) | தொடக்கநிலை 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்காக |
| (3) | பள்ளி மாணவர்களுக்காக |
| (4) | தேர்வு எழுதும் அனைத்து மாணவர்களுக்காக |

| Q23 | பட்டறையில் என்ன திறன்கள் கற்பிக்கப்படுகின்றன? |
|---|---|
| (1) | படித்ததை நினைவில் நிறுத்தும் திறன் |
| (2) | கேள்விகளை அணுகும் முறை |
| (3) | வாழ்க்கைத் திறன்கள் |
| (4) | மேற்கண்ட அனைத்தும் |

(அடுத்த புத்தகத்தைப் பார்க்க)

## 'ஆ' பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

(10 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| Q24 | திரு மாறன் அழகான ஓவியங்களை வரைவார். அவர் இந்த ____________ யில் பல வருடங்களாக இருக்கிறார். | Q24 (     ) |
| Q25 | வேடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அவன் விரித்த ____________ யில் மான் ஒன்று சிக்கியது. | Q25 (     ) |
| Q26 | சமையற்காரன் மீனை வெட்டி மசாலா போட்டுக் கறி சமைத்தான். கறியின் ____________ முதலாளியின் மூக்கைத் துளைத்தது. | Q26 (     ) |
| Q27 | படைவீரன் ஒருவன் தான் போரில் புரிந்த வீரச் செயலைப் பற்றித் தன் நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்தான். அப்போது அவன் தன் ____________ உருவியதைச் செய்து காட்டினான். | Q27 (     ) |
| Q28 | உலகெங்கும் பொருளியல் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. மக்களின் பணப் பிரச்சனையை ____________ அரசாங்கம் பல முயற்சிகளை எடுக்கிறது. | Q28 (     ) |

| | | | |
|---|---|---|---|
| (1) | வாலை | (2) | குரைக்க |
| (3) | குறைக்க | (4) | மனம் |
| (5) | வலை | (6) | வாளை |
| (7) | மணம் | (8) | பனி |
| (9) | பணி | (10) | வளை |

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. நண்பர்களைப் பிரிந்து தன் வீடு செல்லும் பாதை வழியே சென்று கொண்டிருந்தான், மணி. அவன் தோளில்______(Q29)___ புகைப்படக் கருவி ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. அதனுள் அவன் செந்தோசாவில் கண்டு ரசித்த காட்சிகளை அவன் படம் பிடித்து வைத்திருந்தான்.

கையிலிருந்த கை விளக்கின் ஒளி அவனுக்கு ____(Q30)_____ காட்டியது. அன்று, தான் செந்தோசாவில் பார்த்த எழில்மிக்க காட்சிகளை _____(Q31)______ வியந்து கொண்டே வேகமாக நடந்தான்.

திடீரென்று, எங்கிருந்தோ வந்த சத்தம் அவன் காதைத் துளைத்தது. அது அவன் சிந்தனைக்குத் தடை போட்டு விட்டது. மணி தன் கை விளக்கை ______(Q32)______ . தூரத்தில் அவனை நோக்கி ஒரு வாகனம் காற்றைக் கிழித்துக் கொண்டு _____(Q33)_____ வந்தது. மணி நடு பாதையை விட்டு விலகி, சாலையின் ஓரமாக நடந்து வந்தான். வாகன விளக்கின் வெளிச்சம் அவன்____(Q34)________ கூசச் செய்தது. வாகனம் அவனை மோதி நின்றது.

மணிக்கு ____(Q35)____ வந்து கண் விழித்தபோது பக்கத்தில் வாகன ஓட்டுநர் உட்கார்ந்து இருந்தார். அவர் கையில் தனது புகைப்படக் கருவியைக் கண்ட மணி நிம்மதி பெருமூச்சுவிட்டான்.

| |
|---|
| Q29 ( ) |
| Q30 ( ) |
| Q31 ( ) |
| Q32 ( ) |
| Q33 ( ) |
| Q34 ( ) |
| Q35 ( ) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | மெதுவாக | (2) | பார்வையை | (3) | அணைத்தான் |
| (4) | கண்களை | (5) | வைத்தான் | (6) | எண்ணி |
| (7) | கண்டு | (8) | படுவேகத்தில் | (9) | வழி |
| (10) | நினைவு | (11) | அறிவு | (12) | அழகான |

(அடுத்த பக்கம் பார்க்க)

## D8 சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

வெகு காலத்திற்கு முன் சீன நாட்டில் பெரிய மலையின் உச்சியில் புத்தர் சிலை ஒன்று இருந்தது. கரடு முரடான அந்த மலையில் ஏற படிக்கட்டுகள் ஏதும் கிடையா. இருப்பினும் அந்த மலை உச்சிக்கு மூதாட்டி ஒருவர் சென்று வந்தார். ஒருமுறை இளைஞர்கள் சிலர் முகாம் இட அந்த மலை உச்சிக்குச் சென்றார்கள். அப்போது, மூதாட்டி மிகவும் களைத்துப் போய் அங்கு வந்தார். அவரை வியப்புடன் பார்த்த அவர்கள், புத்தரை வழிபடுவதற்காக வந்திருப்பதாக நினைத்தார்கள். ஆனால், அவரோ அந்தப் புத்தர் சிலையைப் பார்த்துவிட்டுக் கீழே இறங்கிச் சென்றார்.

இதுபோல் நாள்தோறும் நடக்கவே இளைஞர்களுக்கு மூதாட்டி மலைக்கு வருவதற்கான காரணத்தை அறிய ஆர்வம் ஏற்பட்டது. அவர்கள் அதைப் பற்றிக் கேட்டபோது, “நான் அறுபது ஆண்டுகளாக இங்கு வருகிறேன். என் தந்தை இறப்பதற்கு முன் புத்தரின் முகத்தில் ரத்தம் வெளிப்படுமானால் உடனே இந்த மலை நொறுங்கி, கடல் தோன்றி, ஊர் அழிந்துவிடும் என்றார். புத்தரின் முகத்தில் ரத்தம் தெரிகிறதா என்பதைக் கவனிக்கவே நாள்தோறும் வருகிறேன்,” என்று கூறிச் சென்றார்.

இதைக் கேட்ட அவர்கள், அவரை ஏமாற்றி மகிழ எண்ணி, புத்தரின் சிலையில் சிவப்புச் சாயத்தைத் தெளித்தார்கள். அவர்கள் ஊர்மக்களிடம் நடந்ததைச் சொல்லி, ``அந்த மூதாட்டி அழுது புலம்பியபடியே வரும்போது அதை வேடிக்கை பார்த்து மகிழ்வோம்,`` என்றார்கள். வழக்கம்போல், மலை ஏறிய மூதாட்டி புத்தர் சிலையைப் பார்த்து அதிர்ச்சியடைந்து, ஊர் மக்களைக் காப்பாற்ற எண்ணி விரைந்தார். அங்கிருந்த மக்களிடம் ஊரை விட்டு வெளியேறுமாறு வேண்டுகோளிட்டார். ஆனால் ஊர்மக்கள் அவளைப் பொருட்படுத்தாது, இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டு அவளைப் பார்த்துச் சிரித்தனர். மூதாட்டி உடனே தன் பிள்ளைகளுடனும் உடைமைகளுடனும் அங்கிருந்து புறப்பட்டார். சிறிது

நேரத்தில் மூதாட்டி சொன்னது போலவே மலை வெடித்துச் சிதறிக் கடல் தோன்றி, ஊர் முழுவதும் கடலுக்குள் மூழ்கியது.

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. இளைஞர்கள் எதற்காக மலைக்குச் சென்றார்கள்? (3 ம.பெ)

________________________________________

________________________________________

37. இளைஞர்கள் ஏன் மூதாட்டியை வியப்புடன் பார்த்தார்கள்? (3 ம.பெ)

________________________________________

________________________________________

38. மூதாட்டி தினமும் மலை உச்சிக்குச் சென்று வரக் காரணம் என்ன?

________________________________________

________________________________________

39. இளைஞர்கள் மூதாட்டியை எவ்வாறு ஏமாற்றினர்?(4 ம.பெ)

________________________________________

________________________________________

40. மூதாட்டி ஊர் மக்களிடம் என்ன கேட்டுக் கொண்டார்? (3 ம.பெ)

41. ஊர் மக்கள் ஏன் மூதாட்டியைப் பொருட்படுத்தவில்லை? (4 ம.பெ)

## P5 SA2
## TESTPAPER 1

மாதவி மிகவும்....

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 2 | 2) 4 | 3) 2 | 4) 4 | 5) 4 | 6) 2 |
| 7) 4 | 8) 4 | 9) 3 | 10) 4 | 11) 1 | 12) 1 |
| 13) 3 | 14) 1 | 15) 1 | 16) 3 | 17)3 | 18) 3 |
| 19) 2 | 20) 4 | 21)3 | 22) 2 | 23) 4 | 24)9 |
| 25) 5 | 26) 7 | 27) 6 | 28) 3 | 29) 12 | 30) 9 |
| 31) 6 | 32) 3 | 33) 8 | 34) 4 | 35) 10 | |

36) இளைஞர்கள் முகாமிட மலைக்குச் சென்றார்கள்.

37)கரடு முரடான மலையின் உச்சிக்குச் செல்வதற்குப் படிக்கட்டுகள் ஏதும் இல்லாமலேயே மூதாட்டி மலை உச்சியை அடைந்ததைப் பார்த்ததால் இளைஞர்கள் வியப்படைந்தனர்.

38) மூதாட்டியின் தந்தை இறப்பதற்கு முன் புத்தரின் முகத்தில் ரத்தம் வெளிப்படுமானால் உடனே அந்த மலை நொறுங்கி , கடல் தோன்றி, ஊர் அழிந்து விடும் என்று கூறியதால் புத்தரின் முகத்தில் ரத்தம் தெரிகிறதா என்பதைக் கவனிக்கவே தினமும் மலை உச்சிக்குக் சென்று வரக் காரணமாகும்.

39) இளைஞர்கள் மூதாட்டியை ஏமாற்ற நினைத்து புத்தரின் முகத்தில் சிவப்பு சாயத்தைத் தெளித்தனர்.பிறகு ஊர் மக்களிடம் நடந்ததைச் சொல்லி மூதாட்டியை ஏமாற்றினர்.

40) மூதாட்டி ஊர் மக்களிடம் ஊரை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொண்டார்.

41) இளைஞர்கள் மூதாட்டியை ஏமாற்ற முயற்சி செய்தார்கள் என்று ஊர்மக்கள் அறிந்ததாலும் அதன் காரணமாக ஊர் அழிந்துவிடாது என்று அவர்கள் எண்ணியதாலும் அவர்கள் மூதாட்டியைப் பொருட்படுத்தவில்லை.